IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

OS.No. 36 /2014

Deposition of witness for DW1

Name : ராஜேந்திரன்

Father Name : சுப்பிரமணியன்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 9 day of January, 2023.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. எனக்கு மொத்தம் 4 அத்தைகள் உள்ளனர். அதில் வாதியை தவிர மற்றவர்களுக்கு 1985-க்கு முன்னரே திருமணம் நடைபெற்றுவிட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ5-ல் யார், யாருக்குமிடையே பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது என்றால் செல்வம் ராஜேந்திரன், சுரேஷ் மற்றும் காசியம்மாள் ஆகியோருக்கிடையே ஏற்பட்டது. வாதியையும் மற்ற எனது 3 அத்தைமார்களையும் சேர்த்து தான் பாகப்பிரிவினை செய்யப்பட்டிருக்கவேண்டும் என்றும், அவ்வாறு செய்யாததால் மேற்படி பி.வா.சா.ஆ5 ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல.

2. பாகப்பிரிவினை பத்திரம் ஏற்பட்டு இருப்பது தெரிந்து வாதியும், எனது மற்ற 3 அத்தைமார்களும் ஆட்சேபணை செய்து காட்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் மனு அளித்திருந்தனர் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் சர்வே எண்.16-ல் ஒரு பகுதி விற்பனை செய்யப்பட்டுள்ள விவரம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவ்வாறு விற்பனை செய்யும் போது அந்த விற்பனை ஆவணத்தில் என் அத்தைமார்கள் 3 பேரிடம் கையொப்பம் பெற்றேனா என்றால் பெற்றேன்.

3. பாகப்பிரிவினையில் வாதி உள்பட 4 அத்தைமார்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்று நான் கூறும் பட்சத்தில் சர்வே எண்.16-ல் உள்ள சொத்தில் ஒருபகுதியை விற்பனை செய்யும்போது மட்டும் 3 அத்தைமார்களிடம் கையொப்பம் பெற்றுள்ளதிலிருந்து அந்த விற்பனை செய்வதற்கு இந்து கூட்டுக்குடும்ப சொத்து என்பதால் என் அத்தைமார்களின் கையொப்பம் இல்லாமல் என்னால் விற்பனை செய்ய முடியாது என்ற விவரம் எனக்கு நன்கு

தெரியும் என்றால் சரியல்ல. நானும், என் தம்பி சுரேஷ் மற்றும் 3 அத்தைமார்கள் ஆகியோர் சேர்ந்து மகேஸ்வரி என்பவருக்கு பொது அதிகாரம் கொடுத்து வழக்கு சொத்தை விற்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. பொது அதிகாரப்பத்திரம் வழங்குவதற்கு 3 அத்தைமார்களின் கையொப்பம் தேவை எனும் போது வழக்கு சொத்து முழுமையும் இந்து கூட்டுக்குடும்ப சொத்து தான் என்றும், மேற்படி அத்தைமார்களுக்கு கூட்டுக்குடும்ப சொத்தில் உரிமை அவர்களுக்கு உள்ளது என்பதை தான் காட்டுகிறது என்றால் சரியல்ல. மேற்படி 3 அத்தைமார்க்ளுக்கு 1985-க்கு முன்னரே திருமணம் நடைபெற்றது என்றாலும் எனது அத்தையும் வாதியுமான மல்லிகாவிற்கு 1987-ல் திருமணம் நடைபெற்றது என்றாலும் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வாதிக்கு 1987-க்கு பிறகு திருமணம் நடைபெற்றுள்ளதாலும் வழக்கு சொத்து இந்து கூட்டுக்குடும்ப சொத்தாகவே இருந்து வந்துள்ளதாலும் வாதிக்கு வழக்கு சொத்தில் சமபங்கு உரிமை உண்டு என்று சொன்னால் சரியல்ல.

5. எங்கள் மூதாதையர் பாலமந்திரிக்கு உரிய சொத்து என்பதாலும், அது கூட்டுரிமை இந்து கூட்டுக்குடும்ப சொத்து என்பதாலும் அதில் சுப்பிரமணியன் என்பவர் அக்கு விடுதலைப்பத்திரம் எழுதி கொடுத்துவிட்டு சென்றுவிட்டதாலும் வழக்கு சொத்தில் வாதியும் அவருடன் உடன் பிறந்த சகோதரிகளுக்கு மட்டுமே பாகம் உரித்தாகும் என்றும், சுப்பிரமணியனின் வாரிசுகளாகிய செல்வம், சுரேஷ் மற்றும எனக்கு பாகம் பெற அறுகதையற்றவர்கள் என்றால் சரியல்ல. நாங்கள் உருவாக்கிய பி.வா.சா.5 பாகப்பிரிவினை பத்திரம் செல்லத்தக்கதில்லை என்றால் சரியல்ல. பாகப்பிரிவினைக்கு பின்பு ஏற்படுத்தப்பட்டுள்ள எந்த ஆவணமும் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதி வழக்கில் கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. எனது முதல்விசாரணையில நான் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

K VENKATESAN Digitally signed by K VENKATESAN

DISTRICT MUNSIF

KATPADI.